இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 3

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 1202/LLU3502 – ஒப்புரவுக் கொள்கைககள்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 24-02-2020 நேரம் : மு.ப 09.30 - பி.ப 12.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08)

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

பகுதி I இல் இருந்து ஒரு வினாவையும் பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I - ஒப்புரவுக் கொள்கைகள்

இப்பகுதியில் இருந்து ஒரு (01) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.

01. சில ஒப்புரவு விதிகள் சட்டவிதிகளுக்கு இணையாக செயற்படுவதற்கு பதிலாக அவை முரண்பட்டன. இது நடைபெற்ற போது, 1873 ஆம் ஆண்டு நீதிமுறை சட்டத்தின் பிரிவு 25 ஒப்புரவு மேலோங்கும் என கூறியது.
ஆங்கில சட்டத்தில் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட கூற்றை விளக்குக.
(20 புள்ளிகள்)

02. நல்ல மனசாட்சியுடன் தனிப்பட்ட ஆட்கள் செயற்பட வேண்டும் என்ற கட்டளையின் மூலம் வேந்தர்கள் (Chancellers) அவர்களுடைய அதிகாரங்களை அநீதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பிரயோகிக்கின்றனர்.
மூன்று ஒப்புரவு மூதுரைகளுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட கூற்றை விளக்குக.
(20 புள்ளிகள்)

## பகுதி 02 - நம்பிக்கைகள் சட்டம்

இப்பகுதியில் இருந்து நான்கு (4) வினாக்களுக்கு விடை தருக.

03. ரனிலுடைய இறுதி விருப்பாவனத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்வரும் கையளிப்புகள் வலிதான நம்பிக்கைகளை உருவாக்குகின்றனவா என்பதை ஆராய்க.

(அ). நுவரெலியாவில் உள்ள எனது தேயிலைத் தோட்டம் எனது பின் சந்ததியினரின் நன்மைக்காக எனது சகோதரி இரோமாவுக்கு:

(ஆ) இத்தாலியில் இருந்து என்னால் இலங்கைக்கு கடத்தப்பட்ட இரத்தினக்கற்கள் தனிப்பட்ட விற்பனை ஒன்றின் மூலம் விற்பனை செய்து, அதில் இருந்து பெறப்படும் வருவாய்கள் எனது தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஊழியர்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்காக என்னுடைய சகோதரன் கசுனுக்கு:

(இ) என்னுடைய பெற்றோர்களின் நன்மைக்காக பயன்படுத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா எனது 10 வயது நிரம்பிய மகனுக்கு

(ஈ) பங்குச் சந்தையில் உள்ள இலாபம் அடையும் ஏதேனும் மூன்று முயற்சியாண்மைகளில் இருந்து பெறப்படுகின்ற வருமானம் என்னுடைய பேரப்பிள்ளைகளின் நலனுக்காக பயன்படுத்துவதற்காக எனது மனைவி சப்புமலிற்கு.

(04 X 05 = 20 புள்ளிகள்)

04. 2016 ஆம் ஆண்டில் சிறிபால ஹிக்கடுவையில் உள்ள 'அரலிய உயன' மற்றும் கொழும்பில் உள்ள 'சல்மல் உயன' ஆகிய இரு சொத்துக்களையும் சிறிபாலவுடைய மகனின் நன்மைக்காக நாமலுக்கு நம்பிக்கையின் அடிப்படையில் கைமாற்றம் செய்தான். 'அரலிய உயன' வை ஐந்து பகுதிகளாகப் பிரித்து இரண்டு வருடங்களுக்குள் அவற்றை விற்குமாறு சிறிபால நாமலை வேண்டினான். மேலும் விற்பனையில் இருந்து பெறப்படும் வருவாய்களை வங்கிக்கணக்கில் வைப்பில் இடுமாறு வேண்டினான். 2019 இல் குறிப்பிட்ட பகுதியில் காணியின் விலை வீழ்ச்சியடைந்ததுடன் நாமல் பலகூறுகளாகப் பிரிக்காது முழுக் காணியையும் விற்பனை செய்தான். சிறிபாலவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நாமல் வருவாய்களை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்தான். மேலும் 'சல்மல் உயன'வில் இருந்து பெறப்படும் வருமானத்தை திலினவின் கல்விக்காக செலவளிக்குமாறு சிறிபால நாமலை வேண்டினான். எவ்வாறாயினும், நாமல் 'சல்மல் உயனவை' அக்கலங்கவிற்கு விற்றான். அக்கலங்க நம்பிக்கையைப் பற்றி அறியாது காணியை கொள்வனவு செய்தான். அக்கலங்க கயானுக்கு காணியை விற்றான். நாமல் 'சல்மல் உயனவை'' விற்பனை செய்து பெற்ற வருவாயில் தேயிலை தோட்டம் ஒன்றை வாங்கினான்.

09ஆம் இல. 1917 ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இயைபான தீர்ப்புச்சட்டத்துடன் தொடர்புபடுத்தி திலினவுக்கு ஆலோசனை வழங்குக.

(20 புள்ளிகள்)

05. 09 இல. 1917ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டம் நம்பிக்கையாளர்கள் மற்றும் கூட்டுநம்பிக்கையாளர்களுடைய கடமைகள் மற்றும் உரிமைகள் சம்பந்தமாக போதுமான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

நியதிச் சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புபடுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரைக்க

(20 புள்ளிகள்)

06. (அ) ருவன் பட்டப்பின் படிப்புக்காக ஜப்பான் செல்ல தீர்மானித்தமையினால் அவன் தன்னுடைய இறப்பர் தோட்டத்தை எவ்வித பிரதிபயனும் இன்றி தனது சகோதரன் சாமிக்கவுக்கு கைமாற்றம் செய்தான். ருவன் நாடு திரும்பிய பின்னர் சாமிக்கவிடம் இறப்பர் தோட்டத்தை மீள கையளிக்குமாறு வேண்டினான். சாமிக்க அவ்வாறு செய்ய மறுத்தான்.

ருவனிற்கு ஆலோசனை வழங்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பதுளையில் இருக்கின்ற சட்டத்தரணியான கமல் மாத்தறையில் வசிக்கும் தன்னுடைய வாடிக்கையாளரான சரத்திடம் பதுளையில் உள்ள சரத்துடைய காணி உறுதி குறைபாடுடையது எனவும் அந்த உறுதியை பதிவு செய்ய முடியாது என அறிவுரை வழங்கினான். கமல், சரத்திடம் இருந்து இந்த காணியை சந்தை விலையை

விட மிகக்குறைவான விலைக்கு வாங்கினான். பின்பு சரத் தன்னுடைய காணி உறுதி குறைபாடு உடையது அல்ல எனவும் கமல் தன்னை ஏமாற்றி விட்டான் எனவும் அறிந்து கொண்டான்.

சரத்திற்கு ஆலோசனை வழங்குக.

(10 புள்ளிகள்)

07. (அ) 09 ஆம் இல. 1917 ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் தர்ம நம்பிக்கை தொடர்பான ஏற்பாடுகளின் நீதிமுறை பொருள்கோடல்கள், இலங்கையில் தர்ம நம்பிக்கையின் எல்லைகளை தெளிவாக வரையறை செய்துள்ளது.
மேலே தரப்பட்ட கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?
இயைபான வழக்குளை ஆதாரம் காட்டி உமது விடைக்குரிய காரணங்களை தருக.

(15 புள்ளிகள்)

(ஆ)சைப்பிரஸ் தத்துவ கோட்பாட்டை சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

08. கீழே தரப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் (02) இரண்டின் மீது குறிப்பெழுதுக.

(அ) ஒப்புரவு நிவாரணங்கள்

(ஆ) 09ஆம் இல. 1917ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2

(இ) முன்னளித்தல் பற்றிய ஊகம் (Presumption of Advancement)

(ஈ) 09ஆம் இல. 1917ஆம் ஆண்டின் நம்பிக்கைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 86

(2 X 10 = 20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது